# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்

## கணினியின் ஒழுங்கமைப்பு

| அலகு – 01 | மதிப்பீடு – 01 |
|---|---|

வினா வகை – **சரி, பிழை அடையாளம் இடல்**

தரம் - 07 நேரம் 15 நிமிடங்கள்

பெயர்/சுட்டெண்:-.................................................

**01. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

1. மைய முறைவழி அலகு(CPU) என்பது கணினியின் மூளையாகக் கருதப்படுகிறது. ( )
2. மைய முறைவழி அலகினை கணினியின் வெளியே இருந்து நேரடியாகப் பார்க்க முடியும். ( )
3. எண் கணித தருக்க அலகின்(ALU) மூலம் கூட்டல், கழித்தல் போன்ற கணிதச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ( )
4. கட்டுப்பாட்டு அலகு(CU) என்பது கணினியில் தரவுகளைத் தற்காலிகமாகச் சேமித்து வைக்கும் இடமாகும். ( )
5. முதலாம் தலைமுறைக் கணினிகளில் ஒருங்கிணைந்த சுற்றுகள் (Integrated Circuits) மின்னணுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. ( )
6. நினைவகப் பதிவகங்களின்(Memory Registers) கதியானது வன்வட்டு போன்ற ஏனைய நினைவகங்களை விடக் கூடியதாகும். ( )
7. இரண்டாம் தலைமுறைக் கணினிகளில் வெற்றிடக் குழாய்கள் (Vacuum Tubes) பயன்படுத்தப்பட்டன. ( )
8. தற்கால நவீன கணினிகளின் கதியை அளப்பதற்கு கிகாஹேட்ஸ் (GHz) எனும் அலகு பயன்படுத்தப்படுகின்றது. ( )
9. நுண்முறைவழியாக்கி(Microprocessor) நான்காம் தலைமுறைக் கணினிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. ( )
10. கடிகாரக் கதி(Clock Speed) என்பது ஒரு செக்கனில் நடைமுறைப்படுத்தப்படும் அறிவுறுத்தல்களின் எண்ணிக்கையாகும். ( )

( புள்ளிகள் : $10 \times 2 = 20$ )



ICTTeacher.xyz – ICT Papers World